பின்னைய நூல் எழ குவளைக் கண்ணனார் - பாரதியின் உரையாடலே காரணமாக அமைந்தது. ஒருநாள் இருவரும் இவ்வாறு உரையாடுகையில் நாலாயிர திவ்யப் பிரபந்தம் பற்றிக் கேட்டார். உடனே குவளைக் கண்ணன் பன்னிரு ஆழ்வார்களும் சேர்ந்து பாடினர் என்றார். அதற்கு பாரதி தான் ஒருவனாகவே நின்று ஆறாயிரம் பாடுகிறேன் என்று கூற இவர், உங்கள் ஒருத்தரால் ஆறாயிரம் பாட முடியாது, ஏனெனில் கலிமுற்ற முற்ற, மனிதனுக்கு ஆயுசு குறைவு. கலி முற்றிய காலத்தில சிறிய மனிதர்கள் நாம். ஆகையினால் முடியாது. இங்ஙனம் கூறுவதால் உங்களுக்குப் புத்தி குறைவு என்று நினைக்கக் கூடாது என்றார். எனினும் பாரதி, பாரதி ஆறாயிரம் என்று எழுதத் தொடங்கினர். ஆனால் அறுபத்தாறு பாடல்களே அவரால் எழுத முடிந்தது. *அவர் பாட விரும்பிய ஆறாயிரம் பாடல்களின் சாரமும், அந்தமும், அறுபத்தாறு பாடல்களில் பொதிந்து கிடப்பதாக அடியேன் அபிப்ராயம்* (குறள் கிருஷ்ணமாச்சாரியர், பாரத தேவிக்குப் பள்ளி எழுச்சி, கட்டுரையிலிருந்து) என்று அப்பாடலின் தன்மையை கண்ணனார் வெளிப்படுத்துகிறார்.

## முடிப்பு

எனவே, குவளை கிருஷ்ணமாச்சாரியார் - பாரதியார் தோழமையில் பாரதியின் பன்முகங்கள் வெளிப்பட்டுள்ளன. இவரின் கட்டுரையின் வாயிலாக, பாரதியாரின் பண்புகளையும் அவரின் புலமையும் நட்பு ரீதியாக அறியலாகின்றன. தேச பக்தியாளர், பெண் விடுதலையாளர், என்றெல்லாம் மிளிரும் பாரதியார் பல நண்பர்களின் வாயிலாக சிறந்த நண்பராக இருப்பினும் தன்னுடன் உறைந்து வாழ்நாள் முழுதும் இவருடன் வாழ்ந்த குவளைக் கண்ணனாரின் பார்வையில் பாரதியார் சிறந்த தோழராகவே மிளிர்கிறார் என்பது முடிபு.

## துணைநூல்கள்


1. தி. முத்துகிருஷ்ணன் : *மகாகவி பாரதியார், வாழ்க்கைச் சித்திரம்,* சென்னை, டிசம்பர். 1986.
2. ரா. அ. பத்மநாபன் : *பாரதியைப் பற்றி நண்பர்கள்,* வானதி பதிப்பகம்,
3. பாரதியார் : *பாரதியார் கவிதைகள்,* விஜயா பதிப்பகம், கோவை,
4. திருவள்ளுவர் : *திருக்குறள்,* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1995.




# பாரதியார் கவிதைகளில் அஃறிணைகள்


இரா. விஜயன், எம்.ஏ., எம்.ஃபில்.,
*வி.என்.ஆர். நகர், வடவள்ளி, கோவை-641 041.*


## முன்னுரை

தன் உயிர் போல் பிற உயிரையும் நினைப்பவனே மனிதன். மனிதனுக்கு இப்பண்பு உண்டோ இல்லையோ, ஆனால் கவிஞனுக்கு இப்பண்பு வேண்டப்படுகிறது. உதட்டளவில் இதைக் கூறாமல், உள்ளத்தளவில் கூடுகட்டி வாழ்ந்த *மனித ஞானப்பறவை* பாரதியார். கவிதையாலே சிறகு பூட்டி இப்பாரினில் இன்ப உலா வந்தவன் பாரதி. குயிலுடன் துயில் கொண்டு, சிட்டுக்களுக்காக மெட்டெடுத்து, காக்கைச் சிறகினில் கடவுளையே கண்டவன். தன் முண்டாசை விரித்து பட்சிகள் இளைப்பாற பட்டுக்கம்பளம் விரித்தவன். பா(ர)தி உண(ர்)வை அஃறிணைகளுக்கு கொடுத்து உயர்திணையான தேவ பறவை. இவரின் படைப்புக்களில் அஃறிணைகள் பெறும் இடம் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நிறபேதத்திற்கெதிராய்

பூனை கண் மூடினால் உலகம் இருண்டுவிடாது. இந்த *பூனை* கண் மூடினால் உலகமே இருண்டு விடும். நிறவெறி மனிதனை ஆட்டிப் படைத்த காலத்தில் ஐந்தறிவு படைத்த மிருகம்கூடத் தன் செயலால் மகான் ஆவதையும், ஆறறிவு படைத்த மக்கள் மாக்கள் ஆவதையும், பூச்சாண்டி காட்டாமல் பூனையை காட்டி புரிய வைப்பது எவ்வளவு பொருத்தம்.

*வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்*
*வீட்டில் வளருது கண்டீர்*
*பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை*
*பேருக்கொரு நிறமாகும்*
*சாம்பல் நிறமொரு குட்டி.........*
*பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்*
*பாலினிற மொரு குட்டி*
*எந்த நிறமிருந்தாலும் - அவை*

*யாவும் ஒரேதர மன்றோ?*
*இந்த நிறம் சிறிதென்றும் - இஃ*
*தேற்ற மென்றுஞ் சொல்லாமோ?*

பாரதிக்கும் சாதி உண்டு. ஆனால் அந்த சாதியில் உயர்திணையாய் உயர்வுபெற்ற அஃறிணைகளுக்கும், அஃறிணையாய்த் தாழ்ந்துபோன உயர்திணைகளுக்கும் இடம் உண்டு என்று உரைப்பதிலிருந்து பாரதி தன் இனத்தோடு பறவைகளைச் சேர்க்காமல், அவற்றோடு தான் சேர்ந்து கொண்ட செயல் உயிரினங்களிடம் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றினை வெளிப்படுத்துகின்றது. கொலை குணம் படைத்த விலங்குகூட தோழமையோடு பழக வைத்து, விலங்கு குணம் படைத்த மனிதர்களையே வெட்கி தலை குனிய வைக்கும் மகாகவியின் பாடலடி மனித பேதத்திற்கெதிராய் விழுந்த சவுக்கடி. *தின்ன வரும் புலி தன்னையுமன்போடு சிந்தையில் போற்றிடுவாய்* என *புலி*யெனப் பாய்கிறார் பாரதியார்.

## கடவுளின் வடிவாய்

கடவுள் தூணிலும் துரும்பிலும் இறைவன் இருக்கின்றான் என்ற கருத்திற்கு மாறாக, அக்கடவுளை பறவைகளின் வடிவத்தில் பார்த்து மகிழ்ந்த பாரதி,

*காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன்*
*கரியநிறந் தோன்றுதையே நந்தலாலா;*
*பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்*
*பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா*
*கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா - நின்றன்*
*கீத மிசைக்குதடா நந்தலாலா;*

என்று, காக்கையின் கரிய நிறத்தை வெறும் மானிடரிடம், அது கரிய நிறமல்ல அது காக்கும் நிறம் என்பதை காக்கை வழி நின்று நமக்கு பாரதி கரைவதுதான் என்னே அழகு ! ***இறைவன் இல்லை*** என்ற அக இருளால் எண்ணற்ற ஜீவராசிகளை சிறை வைத்த நவீன இரணியர்களின் நெஞ்சைப் பிளந்து பட்சிகளின் வாயிலாக பரந்தாமனைக் காட்டுமிடத்து நரசிம்மவதாரம் எடுக்கிறார் பாரதி. அப்பாடல்,

***உயிர்களெல்லாந் தெய்வமின்றிப் பிறிதொன்றில்லை***
***ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்***
*......... இயலுகின்ற ஜடப்பொருள்களனைத்தும் தெய்வம்*

என தம் அவதாரத்தைக் காட்டுகிறார். மேலும், காதலுக்கே தூது



தேவைப்படும் போது கடவுளுக்கு தேவையில்லையாயென்ன?, யாரை அனுப்புவது என யோசித்த பாரதி, பசுமைச் செய்தியைக் கொண்டு செல்லப் பச்சைக் கிளியைத் தவிர வேறு யாரும் உளரோ, என்று எண்ணி கிலி பிடித்த மானிடரிடையே கிளியைத் தூதாக அனுப்புகிறார்.

***சொல்ல வல்லாயோ? - கிளியே***
***சொல்ல நீ வல்லாயோ?***
***வல்லவேல் முருகன் - தனையிங்கு***
***வந்து கலந்து மகிழ்ந்து குலாவென்று***
***சொல்ல வல்லாயோ? - கிளியே***
***சொல்ல நீ வல்லாயோ?***

என்று வினவுகின்றார். மேலும், சேவல் கூவுவது இவ்வுலக இருள்போக்க மட்டுமல்ல மனிதா, உன் அகத்திருள் போக்குவதற்காகத்தான் சக்தி வேலினது வடிவாய் சேவல் கூவுகிறது என்கிறார்.

***தென்னை மரக்கிளை மீதில் - அங்கோர்***
***செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயும்***
***சின்னஞ் சிறிய குருவி - அது***
***ஜிவ் வென்று விண்ணிடை யூசலிட் டேகும்***
***மன்னப் பருந்தொரிரண்டு - மெல்ல***
***வட்டமிட்டுப்பின் னெடுந்தொலை போகும்***
***பின்னர் தெருவிலொர் சேவல் - அதன்***
***பேச்சினிலே சக்தி வேல் என்று கூவும்***

இறைவன் தோன்றினால் நாம் என்ன இறைவனிடம் பொன், பொருள் கேட்போம், அவ்வளவுதான் மானுட அறிவின் எல்லை. அதையும் தாண்டி இறைவனிடம் பாரதி கேட்கும் வரம் இதோ, *கேட்காவரத்தை நான் கேட்கத் துணிந்தேன்* என்று புதிர் போட்டு,

***மண்மீதுள்ள மக்கள் பறவைகள்***
***விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள் -***
***யாவுமென் வினையாலிடும்பை தீர்ந்தே***
***இன்பமுற்றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே***
***செய்தல் வேண்டும் தேவ தேவா !***

என்று வேண்டுமிடத்துத் தன்னலம் பாராது பிற உயிர்களின் துன்பமின்றி வாழ்தலையே விரும்புகின்ற கவிஞரின் உள்ளம் தென்படுகின்றது.

## காதலின் செயலாய்

*சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா செல்வக் களஞ்சியமே என்னைக் கலிதீர்த்தே - உலகில் ஏற்றம் புரிய வந்தாய் !* என்று தன் காதலியையே தன் கற்பனை சக்தியால் கிளியாக மாற்றியவர் இன்னும் ஒருபடி மேல் சென்று குயிலையே காதலிக்கிறார். அக்காதலிலே விழுகிறார், அழுகிறார், துடிக்கிறார் சிறகுமட்டும் இருந்திருந்தால் என்றோ பறந்திருப்பான் அக்குயிலோடு,

*மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ?*
*இனிதிக் குயிற்பேட்டையென்றும் பிரியாமல்*
*காதலித்துக் கூடிக் களியுடனே வாழாமோ?*
*நாதக் கனலினிலே நம்முயிரைப் போக்கோமோ?*
*என்று பலவெண்ணி யேக்கமுறப் பாடிற்றால்*
*அன்று நான் கேட்ட தமரர்தாங் கேட்பாரோ?*
*குக்குக்கு வென்று குயில்பாடும் பாட்டினிலே*

பராசக்தியின் காதலுக்கு முன்னுரிமை கொடுக்காமல் குயிலிசைக்கே முன்னுரிமை தருகின்றார்.

*பத்துப் பனிரண்டு - தென்னை மரம்*
*பக்கத்திலே வேணும் - நல்ல*
*முத்துச் சுடர் போலே; - நிலாவொளி*
*முன்பு வரவேணும்; - அங்கக்*
*கத்துங் குயிலோசை - சற்றே வந்து*
*காதிற் பட வேணும் ;*

என்று குளிர்ந்த நிலவொளியில், தென்றலைத் தழுவும் தென்னை மரங்களுக்கிடையில் குயிலோசையையும் விரும்புகின்றது கவிஞரின் உள்ளம். காதலியின் பேச்சும் கூட குயிலோசையாய்த் தன் காதில் இன்பம் பாய்ச்சுவதை எண்ணி,

*சோலை மலரொளியோ - உனது*
*சுந்தரப் புன்னகைதான்?*
*நீலக் கடலலையே - உனது*
*நெஞ்சி லலைகளடீ*
*கோலக் குயிலோசை - உனது*
*குரலினிமையடீ !*

என்று காதலியின் குரலோசைக்கு கோலக் குயிலோசை உவமைகூறி காதலைச் சுவைக்கிறார். காதல் கடலில் கரைந்தவர்கள் கரை சேர்வது



குடும்பச் சோலையில், அந்த சோலையின் சிறப்பைக் கூட அருவியென மொழி பேசும் குருவி வழி நின்று, *சிறிய தானியம் போன்ற மூக்கு.......... என்வீட்டில் இரண்டு உயிர்கள் வாழ்கின்றன அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்* பாரதி படைத்துக் காட்டும் குருவிகள் தம்முள்ளே பேசிக் கொள்கின்றன; குடும்பத்துக்கு வேண்டிய உணவு தேடிக் கொள்கின்றன; கூடுகட்டிக் கொண்டு, கொஞ்சிக் குலாவி இன்பத்துடன் வாழ்ந்து குஞ்சுகளைப் பசியில்லாமல் காப்பாற்றுகின்றன என்று இல்லற அறத்தினைப் பறவைகளின் வாழ்வியலிலிருந்து எடுத்தியம்புகின்றார்.

## விடுதலை வடிவாய்

எது இன்பம்? விடுதலை இன்பம். எது விடுதலை? அதோ தன் சிறகை எட்டுத்திக்கும் பரப்பி தன் குரலோசையை இப்பிரபஞ்சம் முழுவதும் பரப்பி கட்டுக்கோப்பாய்ச் சுற்றித் திரிகிறதே அச்சிட்டுக் குருவி அதுதான் விடுதலை. யாம் வேண்டும் விடுதலையும் அதுவே என்பதை பாரதியார்,

*விட்டுவிடுதலையாகி நிற்பாயிந்தச்*
*சிட்டுக் குருவியைப் போலே*
*எட்டுத் திசையும் பறந்து திரிகுவை*
*ஏறியக் காற்றில் விரைவோடு நீந்துவை*
*மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடைக்குமிவ்*
*வானொளியென்று மதுவின் சுவையுண்டு*

என்ற இப்பாடலில் *மனம் சார்ந்ததன் வயமாகும்* என்ற கருத்திற்கேற்ப பாரதியின் மனமும் பறவையின் வயமாகி விண்ணில் சிறகு விரித்துப் பறக்கின்றது. சுதேசி என்று கூறித்திரியும் சில கயவர்களின் முகத்திரையைக் கிழித்து இவர் நிலை இதுவென்று கிளிக்கு மட்டுமல்ல இப்புவிக்கே காட்டுகிறார்.

*நெஞ்சி லுரமுமின்றி நேர்மை திறமுமின்றி வஞ்சனை சொல்வாரடீ - கிளியே வாய்ச்சொல்லில் வீரரடீ கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலன்றி நாட்டத்திற் கொள்ளாரடீ - கிளியே நாளில் மறப்பாரடீ* என்று கிளிமொழியாய்க் கவிதை மொழியில் வஞ்சகக் கயவர்களை இனங்காட்டுகின்றார். மக்கள் இழிநிலைகளை உணர்த்தவும் விலங்குகளை வைத்துப் பாடம் புகட்டவும் தயங்கியதில்லை அவர். இதை, *நாங்கள் முப்பது கோடி ஜனங்களும் நாய்களோ - பன்றிச் - சேய்களோ?நீங்கள் மட்டுமனிதர்களோவிது நீதமோ? - பிடி - வாதமோ?* என்று இவர் குரல் கர்ஜிக்கும் போது நம் எண்ணங்கள் நிச்சயம் சிறகு விரிக்கும் என்பது திண்ணம். பொய்

முகமூடிப் போட்டுத் திரிந்து, நாட்டிற்கு ஒரு பயனும் இன்றி இருக்கும் இம் மானுடர்களைக் காணச் சகிக்காமல், *தெய்வமே, எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட்டாயோ? பாழ்பட்ட மனிதக் கூட்டத்தையும் அதன் கட்டுக்களையும் நோய்களையும் பொய்களையும் உதறி எறிந்து விட்டு, நான் இச்சைப்படி வானத்தில் பறந்து செல்ல மாட்டேனோ* என்கிறார்(சிட்டுக்குருவி, ப.158).

## மானுட வழிகாட்டியாய்

இயற்கையின் வடிவாய்த் திகழும் அஃறிணைகள் கற்றுத் தரும் கல்வி மானுட உயர்வுக்கு மிகத் தேவை என்பதை பாப்பாப் பாட்டு வாயிலாக இப்பாருக்கே அறிவிக்கிறார் பாரதியார்.

*சின்னஞ்சிறு குருவி போலே - நீ*
*திரிந்து பறந்துவா பாப்பா*
*வன்னப் பறவைகளைக் கண்டு - நீ*
*மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா*
*பாலைப் பொழிந்து தரும், பாப்பா - அந்தப்*
*பசுமிக நல்லதடி பாப்பா;*
*வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது*
*மனிதர்க்குத் தோழனடி பாப்பா*
*வண்டியிழுக்கும் நல்ல குதிரை - நெல்லு*
*வயலில் உழுது வரும் மாடு*
*அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு - இவை,*
*ஆதரிக்க வேணுமடி பாப்பா*

என்று மானுட அடிப்படையான மனித நேயத்தின் முதல் படியாய் ஜீவ காருண்யத்தை முன் வைக்கிறார் பாரதியார். தன் உயிர் போல் பிற உயிரையும் கருதும் நிலைபோய், பிற உயிரே தன் உயிராய்க் கருதி மாறாத இந்த சமுதாயம் மாறத்தன் உருவம் மாற்றிக் காட்டுகிறார் பாரதி,

*வானிற் பறக்கின்ற புள்ளெலா நான்*
*மண்ணிற் றிரியும் விலங்கெலா நான்*
*மண்ணிற் கிடக்கும் புழுவெலா நான்*
*வாரியிலுள்ள உயிரெலா நான்*

நிலைமாறும் இம் மானிடரிடையே, குருவியை வைத்து மானுட இலக்கணம் வகுக்கிறார். *குருவிக்குப் பேசத் தெரியும், பொய் சொல்லத் தெரியாதே, குருவியில் ஆண், பெண் உண்டு தீராத கொடுமைகள் இல்லை. குருவிக்கு வீடுண்டு தீர்வை கிடையாது;* நாயகனில்லை



*சேவகமில்லை* என்று தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மக்கள் வறுமையை ஒழிக்காமல் வந்தே மாதரம் சொல்லிப் புண்ணியமில்லை என்பதை, கிளி வாயிலாக,

*சொந்தச் சகோதரர்கள்*
*துன்பத்திற் சாதல் கண்டும்*
*சிந்தையிரங்காரடீ - கிளியே*
*செம்மை மறந்தாரடீ*
*தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்*
*தடுக்க முயற்சியுறார்*
*வாயைத் திறந்து சும்மா - கிளியே*
*வந்தே மாதரென்பார்*

என்று கிளி வழியாகக் கூறுவதுதான் மிகப்பொருத்தமாக அமைந்துள்ளது.

## முடிவுரை

பாரதியார் கவிதைகளில் அஃறிணைகள் உயர்திணை இடத்தைப் பிடித்துள்ள நிலை கண் கூடு. பாரதி குயிலைக் காணும்போது கூவினார் குருவியைக் காணும் போது தன் சிறகை விரித்தார் ; கிளியை காணும் போது கொஞ்சு மொழி பேசினார், காக்கையைக் காணும்போது கரிய நிறமாய் மாறினார். காணும் பட்சிக்காகவே தன் காட்சி அனைத்தையும் மாற்றி அமைத்தவர் பாரதியார். மறுபிறப்பு என்று ஒன்று இருந்திருந்தால் அவர் நிச்சயம் இவ்வானில் ஏதோ ஒரு பறவையாய் தன் கவிதைமொழி பேசி இப்பிரபஞ்சம் முழுவதும் சிறகடித்துப் பறந்திருப்பார். இப்போது மட்டும் என்ன? உங்கள் எண்ணங்களை மட்டுமல்ல ஜன்னல்களையும் திறந்து வையுங்கள் சிட்டுக் குருவியாய் அந்த ஞானப்பறவையே வந்து அமரலாம் கவிதை மொழியோடு, கொஞ்சுமொழியும் கூறலாம், கேட்டு இன்புறலாம்.